குமாரசுவாமிப்புலவர் நூலகம்
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

கணபதி துணை.

# ஆலய சேவை

அச்சுவேலி

**சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்**

அவர்களால் எழுதப்பெற்றது.

※

மாவிட்டபுரம், சு. துரைச்சாமிக் குருக்கள்
(அகில இலங்கை சைவாலயத் தர்மகர்த்தா சபைத் தலைவர்)

மாவிட்டபுரம், கு. பாலசுந்தரக் குருக்கள்
(அகில இலங்கை வேதாகம சைவ சித்தாந்த சபைத் தலைவர்)

ஷை சபையாரால் பதிப்பிக்கப்பெற்றது.

※

4—ம் பதிப்பு

ஸ்ரீ சாரதா அச்சகம், யாழ்ப்பாணம்.

பராபவஸ் ஐப்பசிமீ

1966

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்.
இலங்கை.

உ
சிவமயம்

# ஆலயசேவை.

ஆலயமாவது எங்கும் வியாபகமாய் மறைந்திருக்கும் கடவுள், தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு, சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம். சைவாலயங்களும் அங்கே நடக்கும் கிரியைகளும் மனம் போனபடி ஒவ்வொருவரால் ஒவ்வோர்காலத்து உண்டாக்கப்பட்டன அல்ல. சைவாலயங்களும் அங்கே செய்யப்படும் பிரதிஷ்டை உத்ஸவம் பிராயச்சித்தம் முதலிய கிரியைகளும் சிவாகம விதியின்படி நடைபெற்று வருகின்றன. விஷ்ணு ஆலயக் கிரியைகள் வைஷ்ணவாகம விதியின்படி நடைபெற்று வருகின்றன. வேதாகம விதிகள் அக்காலத்து மன்னரின் சட்டமுமல்ல; பொதுஜனங்களுடைய அபிப்பிராயமுமல்ல; பல மதத்தவரும் குழுமிய சட்டசபையின் தீர்மானங்களுமல்ல. வேதசிவாகம விதிகளை அருளிச்செய்தவர் சிவபெருமானே. நான்கு வேதங்களையும் இருபத்தெட்டாகமங்களையும் தமிழிலுள்ள பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களையும் பிரமாண நூல்களாகக் கொண்டு ஒழுகும் வைதிக சைவருக்கே ஆலயங்கள் உரியனவாம். சைவசாஸ்திரங்களைப் பிரமாணமாகக் கொள்ளாத சுயமரியாதைக் கட்சிக்காரர் பிரமசமாஜத்தார், ஆரியசமாஜத்தார் முதலிய குழுவினர்க்கும் சைவாலயங்கட்கும் எட்டுணையேனும் சம்பந்தமில்லை. சமய சாஸ்திரங்களை நம்பாமலிருந்துகொண்டு நாங்கள் சைவர்கள் என்று சொல்லிக்கொள்வது முழுப்பொய்யே. தங்கள் தங்கள் சமய நூல்களில் நம்பிக்கையில்லாதிருந்துகொண்டு அந்தந்தச் சமயத்தவரெனச் சொல்லிக்கொள்வது தகுதியன்று. வேதாகமங்களைப் பதிவாக்கென விசுவசித்து ஒழுகும் வைதிக சைவோத்தமர்கட்கே சை

வாலயங்களைப் பரிபாலிக்கும் அதிகாரம் உண்டு. தமிழ் நாட்டு மூவேந்தரும் குறுநிலமன்னரும் பிற அரசர்களும் அக்காலத்தில் ஆகம விதியின்படி நடப்பதே ஆலய பரிபாலனமென்று கருதினர். ஆகம ஸ்தானத்தில் அரசாங்க சட்டத்தை நிறுத்துவது அரச தருமமாகாது. ஆகமத்தொடு முரணி, வருணதருமம், ஆச்சிரமதருமம், ஆலயப்பிரவேசம் என்பவற்றிற்குச் சட்டஞ்செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமேல், ஆலயநிர்மாணம் பிரதிஷ்டை பூசை உற்சவம் நிவேதனம் ஆராதனை உபசாரம் பிராயச்சித்தம் முதலிய அனைத்தினுக்கும் பிரமாணம் உண்டு பண்ண அவ்வரசாங்கம் வன்மையுடையதுதானே! பகிரங்க அசைவர்கள், சைவசமயப் பிரமாணநூல்கள் இவையென்று அறியாதவர்கள், சிவதீட்சை விபூதி ருத்திராக்ஷ தாரணம் சிவாலயசேவை திரிபதார்த்தவிவேகம் முதலிய சதாசாரங்களெல்லாம் தெரியாதவர், முரணான பல மதத்தவர் முதலிய பலவகைப்பட்ட குழுவினரெல்லாங் கூடிய அரசாங்கமன்றம் இராசாங்கத்தமர்ந்த வைதிக சைவ சமயத்துக்குச் சட்டம் அமைப்பது இச் சமயிகளது மானத்தைக்கெடுத்து விடுவதேயாம். ஆகவே சமய ஞானமில்லாதவர் பெரும்பான்மையோரிருக்கும் மன்றங்களின் சட்டத்தை ஆராய்ச்சியின்றி ஏற்றுக் கோடல் சைவர்க்குச் சிறிதும் அடாது. சைவர் அவற்றை ஆராய்க லாவது அவை சமயப்பிரமாண நூல்களிற் காணப்படும் விதிகளை அனுசரித்தனவா எனக் காணுதலேயாம்.

ஒருவன் தான் கைக்கொண்டுவரும் சமயத்தில் நம்பிக்கை கெடுமாயின், அவன் அச்சமயத்தினின்றும் விலகிக் கொள்வதே மேல். கிறீஸ்த மகமதிய சமயங்களில் இவ்விதமானவர்கள் இருப்பார்களாயின் அவர்கள் அச்சமயங்களினின்றும் விலக்கப்படுவார்கள். இது சரித்திர பூர்வமானது. இந்தியாவிலும் வைதிக மதக்கிரியை ஆசாரம் முதலியவற்றில் விருப்பற்றோர் சிலர் தம்மை ஆரிய சமாஜத்தின ரென்றும் பிரம சமாஜத்தின ரென்றும் அழைத்துத் தத்தமக்கியன்ற வழிபாட்டு முறைகளில் நிற்

கின்றனர். தமக்குப் பொருந்தாத முறையில் நிற்போரை யாவது அவரது சமயாசாரங்களையாவது பங்கப்படுத்தின ரல்லர். இதுவே சமய சுதந்தரமாம் நமது சமயத்திற் குப் பாப்பாண்டவரைப் போல் அதிகார முடையவர்கள் இல்லை. நூல்களே அதிகாரமுடையன.

பெருந்தனம் விட்டு ஆலயங்களை உண்டுபண்ணிய வள்ளல்களும், அவை எப்போதும் நடைபெறுவதற்கா கப் பூமி முதலியவற்றைத் தருமசாதனஞ் செய்து வைத்த வர்களும், நம் முன்னோரான சைவ வைஷ்ணவர்களே யாம். முதல் கட்டிவைத்தவர்களுடைய எண்ணத்துக்கு மாறாக ஆலயங்களை நடத்த எண்ணுவது நம்பிக்கைத் துரோகமான குற்றத்தின் பாற்படும். தருமசாதனங்க ளைக் கொடுத்தோருடைய விருப்பத்தின்படி நடத்துதல் அரசாட்சியாரின் முக்கிய கடமையுமாகும்.

பொதுஜன அபிப்பிராயமே சமயஉண்மைகளெனவும் நாட்டுவராயின். அரசாங்க விஷயத்திற்றான் பொதுஜன அபிப்பிராயத்தின் வண்ணம் போகவேண்டுமென்ற கொள்கை சிலகாலமாக அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. சமய விஷயத்தில் இக்கொள்கையை எச்சமயத்தாரும் அங்கீகரிக்க மாட்டார்கள் பூதபௌதிக சாஸ்திரங்களைத் தானும் எல்லாரும் இலகுவில் விளங்கிக்கொள்ளமாட் டாத நிலையில், அதிலும் அதி நுட்பமான சமய விஷ யங்களைப் பொதுமக்கள் அறிவார்களென்பது அறியா மையாகும். தங்கள் காரியத்தை நிறைவேற்றுதற்குக் கைக்கொள்ளும் கபடச்செயல் இதுவென்றே கொள்ளப் படும். ஆலயங்களை நடத்தும்விதி வேதாகமங்களேயாம்.

வேதசிவாகமங்களை எதிர்த்துப் பழையன கழி தல் புதியன புகுதல் முதலிய எவ்வகைப்பட்ட மாற் றங்களையும் ஆலயங்களிற் புகுத்தச் சைவசமயிகட் குத்தானும் அதிகாரமில்லை. புதியவைகள் புத்திக்குப் பொருந்துவனபோலத் தோன்றினும் ஆகமவிதிக்கு விரோதமாயின், அவைகளை ஆலயங்களிற் புகுத்து

தல் தகாது. சந்தேக விபரீதங்கள் வருமிடத்து ஆகமவிதிகளை ஆராய்ந்து அவற்றின்படியே கிரியைகளை நடத்தல் வேண்டும். அரசனது ஆணைவழி நடவாதோர் தண்டிக்கப்படுதல் போல, வேதாகம விதிகளை மீறி நடப்போர் தண்டிக்கப்படுவர். அது, 'அருளினுலுரைத்த நூலின் வழிவராத தன்மஞ்செய்யி—னிருளுலா நிரையத் துன்பத்திட்டிரும் பாவந்தீர்ப்பன்'! எனச் சித்தியாரிற் கூறப்பட்டவாற்ருல் உணரப்படும்

பிராமணர்முதற் புலையரீருகச் சிவபெருமானை வழிபடும் எல்லாச் சாதியாரும் சைவர் எனப்படுவர். உயர்ந்த நான்கு வருணத்தாரும் அநுலோமரும் ஓமத்தோடு செய்யப்படுவதாகிய ஔத்திரி தீக்ஷைக்கு யோக்கியர் எனவும், மற்றையோர் ஔத்திரி தீக்ஷைக்கு அங்கமாயுள்ள நயனதீக்ஷை, பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை, மானசதீக்ஷை, சாத்திரதீக்ஷை யோகதீக்ஷை என்னும் அறுவகைத் தீக்ஷைகளுள் அவரவர் சாதிக்கும் பரிபக்குவத்திற்குமேற்ப, ஒரு தீக்ஷை பெறுதற்கு யோக்கியர் எனவும் உண்மை நூல்கள் வற்புறுத்துகின்றன. தூலலிங்கமாகிய தூபியையேனும் திருக்கோபுரத்தையேனும் தரிசித்து அவற்றுக்கெதிரே பத்திரபுஷ்பங்களைத் தூவித் தோத்திரஞ் செய்வது அவர்களுக்குச் சிவபூசை. சூரியவிம்பத்தினடுவே சதாசிவமூர்த்தி அனவரதமும் எழுந்தருளியிருப்பார் என்று நினைத்து, அவருக்கெதிரில் பத்திர புஷ்பங்களைத் தூவித் தோத்திரஞ் செய்வதும் அவர்களுக்குச் சிவபூசை. கோயில்களில் வெளிப்பிரகாரத்தைத் திருவலகிடுதலும், நைவேத்தியத்துக்கு விறகு கொடுத்தலும், அபிஷேகத்துக்குக் கோரோசனை கொடுத்தலும் அவர்களுக்குச் சரியை. வருத்தமற உய்யும் வழி என்னும் நூலிலே,

தூவியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டு
தொழு பாவமறும் வாய்த்துறுமின்பம்

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, சிவாகமங்கள் பெருங் கோபுரங்களை நிருமிக்கும்படி விதித்ததும், உற்சவகாலங்களில் மூர்த்தங்கள் திருவுலாக்

கொண்டருள விதித்ததும் பெரும்பான்மை தாழ்ந்த சாதியார் பொருட்டேயாம்.

பிரதிலோமர் முதலிய தாழ்ந்த சாதியாருள் இருவினையொப்பு மலபரிபாகம் தீவிரதரசத்திநிபாதம் உடையவர்களாயிருப்பின் அவர்கள் ஞானதீக்ஷைக்கே உரியவர்களாவர். அவர்கள் எந்த விதத்தாலும் கிரியா தீக்ஷைக்கு உரியராகார். சிவஞானபோதமா பாடியத்திலே, சிறப்புப்பாயிரத்திலே,

"சைவத்திலே தீக்ஷை முதன்மையாயின் வருணம் ஆச்சிரமம் பற்றித் தாரதம்மியம் கூறுதல் பொருந்தாதெனின்; தீக்கைப்பின் விதிக்கப்படும் ஆசாரங்களெல்லாம் வருணமும் ஆச்சிரமமும் பற்றியே தாரதம்மியம் ஓதலானும் சிவதீக்கை ஆன்மாவிற்கேயன்றி, வைதிகச் சடங்குபோல உடம்பு முதலியவற்றிற்கு அன்றெனச் சித்தாந்தசாராவளி முதலியவற்றிற் கூறுதலின் அத்தீக்கையால் உடம்பின் கண்ணதாகிய சாதி நீங்காமையானும் சாதியுந் தீக்கையாற் கழியுமாயின் ஆதிசைவம், மகாசைவம், அநுசைவம் அவாந்தரசைவம் என்னும் வகுப்பு ஏலாமையானும் மகாசைவருக்கு விதித்த ஆசாரம் அவாந்தரசைவராற் செய்தல் கூடாமையானும்.........வருணத்தினும் ஆச்சிரமத்தினுந் தாரதம்மியம் உண்மை தெற்றென உணரப்படுமாகலின், அதனை இல்லையென்றலும் வேதவழக்கோடும் சிவாகம வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றேயாமென மறுக்க"

எனக் கூறப்பட்டிருக்கின்றது- சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரம் முதலாம் அதிகரண வெண்பாவில்,

"தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித்து"

என மெய்கண்ட தேவநாயனார் கூறியருளினார். இதற்குச் சிவஞானசுவாமிகள் வகுத்த சிற்றுரையில் "தவஞ்செய்தற்குரிய உயர்ந்த குலத்தின்கண் வந்து தோன்றி" எனவும், "நற்சாதியின் வந்துதித்து ஞா

னத்தை நண்ணுதலென்ற அருந்தாபத்தியான் இழிகுலத்தோர் தத்துவ ஞானத்துக் குரிய ரல்லரென்பது பெறப்பட்டது'' எனவுங் கூறப்பட்டிருக்கிறது. சிவஞானசித்தியாரிலே எட்டாஞ் சூத்திரத்து 24-ம் செய்யுளில் ''இந்தப்பார்மே-னுட்டிய நற்குலத்தினில் வந்தவதரித்து'' எனவும்,

இரண்டாம் சூத்திரம் 90-ம் செய்யுளில் ''தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய் சாதியினில் வந்து'' எனவுங் கூறப்பட்டிருக்கிறது.

இத் திருவாக்குக்களினலே, இழிகுலத்தார் ஆதிகாலந்தொட்டு உள்ளவர்கள் என்பதும், அவர்கள் உண்மைச் சரியை கிரியை யோகங்களாகிய அழிவற்ற தவஞ்செய்தற்குரியர் அல்லர் என்பதும் வலியுறுத்தப்பட்டன. திருநாவுக்கரசுநாயனுர்,

''ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்''

என்னுந் தேவாரத்தில் ''ஆதித்திராவிடர்'' என்று சொல்லப்படுவோரைப் புகழ்ந்துள்ளார் எனவுஞ் சிலர் கழறுகின்றனர். புலையரேனும் என்ற இழிவும்மையானும், அன்பராகில் என்ற எச்சத்தானும், இன்மையையும், ஏகதேசத்தையும் விளக்கியதன்றி, இழிகுலத்தோர் அனைவரையும் சிவாலயத்தில் நுழைவிக்க வேண்டும் என்பதற்குப் போதிய சான்ருகாமை காண்க.

ஆன்மாக்கள் தாம் தாம்செய்த கன்மத்துக்கீடாகவே இறைவன் கட்டளைப்படி இயல்பாகப் பலவேறு பிறவிகளைப் பொருந்துகின்றன. கன்மமானது மூன்று விதமாம். அவை சாதி ஆயுள் போகம் என்பனவாம். உமாபதிசிவாசாரியர் சிவப்பிரகாசத்திலே ''கன்மநெறி திரிவிதநற் சாதியாயுட் போகக் கடனதென வருமூன்று முயிரொன்றிற் கலத்தல்-தொன்மைய தூழல்ல துணவாகா'' எனக் கூறியிருப்பதும், அருணந்தி சிவாசாரியர் சித்தியாரிலே,

"பேறிழவின்பமொடு பிணிமூப்புச் சாக்காடென்னு மாறுமுன் கருவுட்பட்ட தவ்விதி யனுபவத்தா-லேறிடும்"
எனக் கூறியிருப்பதும், சர்வாத்மசம்பு சிவாசாரியர் 'ஈண்டு சாதி குலம் பிறப்பு முதலியவற்றான் அபிமானஞ் செய்தற்கிடமாகிய இந்தத் தூலதேகம்" எனக் கூறியிருப்பதும் இதற்குப் பிரமாணங்களாம்.

கன்மநெறியாகிய ஜாதி ஆயுள் போகம் என்னும் மூன்றனுள்ளே சாதியை மாத்திரம் சமப்படுத்த முயலுகின்றவர்கள் ஆயுளையும் போகத்தையும் சமப்படுத்த முயன்றிலர், இயலாமை பற்றிப் போலும். இவை இயலாதாகவே சாதியை மாத்திரஞ் சமப்படுத்த இயலுமெனக்கொண்ட இவர் புத்திவன்மை வியக்கத்தக்கதே. மனிதர்களுக்குள்ளே பேதம் வேண்டுவதில்லை. எனக் கூறுஞ் சமரச ஞானிகள் மேலைத்தேசத்தார் கீழைத்தேசத்தார் எனப் பேதங்கொள்வதும் குற்றமாம். ஓடுஞ் செம்பொன்னுஞ் சமமென மதித்து, உலகபோகங்களை வெறுத்து, மேலான நிலையிற்கூடும் சமரச ஞானத்தை இடைப்பட்ட நிலையில் அநுட்டானத்திற்குக் கொண்டுவரும்படி ஏவுதல் துன்பத்திற்கிடமேயாம். அபேதமாயிருக்குந் தன்மை. மனமிறந்த நிலையில் வருவதன்றி மனமுள்ள வரையும் பேதமுமுண்டேயாம்.

இனி, நமது தேகத்திலுள்ள அங்கங்களுள்ளே; கரங்களுக்குப் பெருமையும் கால்களுக்குச் சிறுமையும், வலக்கரத்துக்கு மேன்மையும் இடக்கரத்துக்குச் சிறுமையும் கொள்வது உண்மை யியல்பாயினுமாகுக; பழக்கவாசனையாயினும் ஆகுக. தேகம் முற்றும் நமக்குரியதன்றோ; எந்தப் பகுதியையும் நாம் சேதிக்க உடன்படுவோமா? உடன்படோம். அங்ஙனமாகவும் ஒரு பொருளை இடக்கையால் ஒருவன் கொடுத்தால் வாங்குதல் செய்யின் அதிருப்தியையும் வலக்கையால் கொடுத்தால் திருப்தியையும் உண்டாக்குகின்றது.

புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்
இலங்கை.

கையாலியற்றுவதை ஒருவன் காலாற் செய்தல் எத்துணைப் பெருங்குற்றமாகக் கருதப்படுகின்றது. அதுபோல் ஆசாரமுள்ள மேற்குலத்தோர் வலக்கரம் போல்வர். ஏனையர் இடக்கரம் போல்வர். அநாசார நெறியுடைய கீழ்க்குலத்தோர் கீழ் அவயவங்களையும் ஏனையோர் மேல் அங்கங்களையும் போல்வரென்றே விவேகிகள் கருதுவர்.

பெரிய புராணத்திலே பிராமணர் முதல் புலையரீறாக சாதிகள் சொல்லப்பட்டுள்ளன. இப்படியே கந்தபுராணம் முதலியவைகளிலும் பலவகைப்பட்ட வருணங்கள் கூறப்பட்டுள்ளன. சங்க நூல்களிலும் சாதிகள் சொல்லப்பட்டுள்ளன. இவ்வாறே வடமொழி நூல்களிலும் ஜாதிபேதங்கள் வருவதைக் காணலாம். சுப்பிரபேதாகமத்திலே நான்கு சாதிகளும் அவற்றிற்றோன்றிய கலவைச்சாதிகளும் வருகின்றன. சிவாகமங்களும் சைவ சமய நெறி முதலிய சமய நூல்களும் வருணாச்சிரமபேதம் பற்றியே ஆசாரங்களை விதிக்கின்றன. இத்த உடம்போடழியும் உலக இன்பத்துக்குக் காரணமாகிய சுகவாழ்வை விரும்பி அழியாத இம்மை மறுமை இன்பத்துக்கு ஏதுவாகிய சமயாசாரத்தைக் கைவிடுதல் தருமமாகாது. சாஸ்திரங்களையும தொல்லாசாரங்களையும் மீறி நடத்தல் சிவத்துரோகத்தின் பாற்படும். சிவத்துரோகம் பொல்லாதது! பொல்லாதது.

“சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறு மாதமியேனாயேன்” “கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்” என்னுந் திருவாக்குக்களையும் இவை போன்ற பிறவற்றையும் சைவர் சிலர் சொல்லி, இழிந்த சாதியாராயினும் சுத்தமுடையவராயிருப்பின் ஆலயப் பிரவேசம் செய்யலாமென வாதாடுகின்றனர். மாணிக்க வாசக சுவாமிகள் முதலாயினோர் முறுகி வளர்ந்த அன்பு மேலிட்டவிடத்தும் ஞானநிட்டை கைவரப் பெற்றவிடத்தும், சாதி முதலியன முன்னிற்கா எனக் கூறியதேயன்றி எல்லாச் சாதிகளையும் ஒன்றுபடுத்தவேணும் நீக்கிவிடவேணும் கூறியதன்றென்பதாம். ஞான நிட்டையுடைய

ஜீவன்முத்தர்களுக்கு இவ்வுலகத்தில் இருவினைகளுமில்லை. வினைகளைச் செய்தாராயினும் ஒருபலனை நாடுவதுமில்லை; அவர்கள் பலன் கருதாது வினைகளைச் செய்யுங் காலத்திலே சமயாசாரம் தவம் மனச்சஞ்சலம் முதலியனயாவும் இல்லை. இவ்வா றொன்றுமின்றிப் பாலரைப்போல இவைகளைச் செய்யாதிருப்பினும் இருப்பர். செய்யினும் பித்தர் போல் நியதியில்லாது நேர்ந்தபடி செய்வர். அவ்வாறு செய்யுங் காலத்தும் பேய் பிடிக்கப்பட்டவன் போலச் சிவமே தாமாக நின்று செய்வர். இதுவன்றிப் பரமானந்த மேலீட்டினுல் பாடலாடல்களைச் செய்திடினும் செய்வர். உண்மை நாயன்மார்களுக்கு இக்குணங்கள் பொருந்தப்பெற்றமை புராணங்களால் அறிக.

மேற்காட்டிய தமிழ் வேதத்தைப் பிரமாணம் காட்டி சாதி குலம் கோத்திரம் பிறப்பு முதலிய பேதம் இல்லை; அவை பற்றி உயர்வு தாழ்வுகளுமில்லை என்று வாதாடும் சைவர்கள் ''தந்தையார் தாயாருடன் பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந் தாமாரே'' என்னும் தேவாரத்துக்கும் தந்தை முதலிய முறைகளெல்லாம் பொய்; சைவத்தில் அம்முறை வேற்றுமை இல்லை; ஆகையால் முறை கெட்டு நடக்கலாம் என்று துர் அர்த்தம் செய்யப் பின்னிற்க மாட்டார்கள்.

உயர் சாதியாருள்ளும் ஆசாரமில்லாதவர் ஆலயத்திற் பிரவேசிக்கவில்லையா எனின்; அநாசாரமுடையவர்களைப் பிரவேசிக்க விடாது தடுத்தலும் பிராயச்சித்தம் செய்தலுமே உண்மையான ஆலய பரிபாலனமாகும். அதுவன்றி ஆசாரத்தை ஒருசேரக்கை விடுதல் தகாது. ஆலயத்தைக் கேடடையும்படி விட்டு, மற்றொரு பெருங்கேட்டிற்கு அதனையே ஆதாரமாகப் பேசி வருவது ஆலயத்தை மேலும் நாசமாக்குவதாகவன்றோ முடியும். இந்தத் தேசம் புண்ணிய பூமி. மேல்நாடு மிலேச்சதேசம். புண்ணிய

பூமியிற் பாவிகளும் மிலேச்சபூமியிற் புண்ணியர் களுமிருக்கிறார்கள். இங்கேயுள்ள பாவிகளை அங்கே துரத்திவிட்டு, அங்கேயுள்ள புண்ணியர்களை இங்கே அழைக்க ஒருவராலும் முடிவதன்று. இங்கேயுள்ள பாவிகளை இங்கே வைத்துத் திருத்தல் வேண்டும். அங்கேயுள்ள புண்ணியரை அங்கே வைத்து மகிழ வேண்டும் என்பதாம்.

பெரியபுராணம் முதலிய உண்மை நூல்களைக் குருமுகமாகப் படித்துணர்தற்கேற்ற புண்ணிய விசேடமில்லாத நவீனர் சில்லோர் திருநாளைப்போவார் நாயனார் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் முதலிய மெய்யடியார்களது சரித்திரங்களைத் தமது தைவிக்ச் சட்டமறுப்பியக்கத்துக்குப் பிரமாணமாகு மெனக் கரைகின்றார்கள். அதனையும் ஆராய்வாம்.

திருநாளைப்போவார் நாயனார் சிவாலயங்கள் தோறும் பேரிகை மத்தளம் முதலியவற்றுக்குத் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும் அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுக்கும் நியதி யுள்ளவர். ஆலயத்தில் திருவாயிற் புறத்தில் நின்று அன்பின் மேலீட்டினால் கூத்தாடிப் பாடுகின்றவர். ஒரு நாள் திருப்புன்கூரிலே சுவாமியை நேரே கும் பிட நினைந்தார். இவரது மெய்யன்பினால் சுவாமி தமக்கு முன்னிருந்த இடபதேவரை விலகும்படி செய்து காட்சி கொடுத்தருளினார். இதனாலே இழி குலத்திற் பிறந்தவர்கள் அதற்கேற்பத் தொண்டு செய்தல் வேண்டுமென்று பெறப்பட்டது. ஐந்தாங் குரவராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலப் பெருந் தகையார் திருநாளைப்போவார் புராணசூசனத்தில், தத்தம் சாதி நெறிகடவாது சிவனை வழிபடுதல் என் னுந் தலையங்கத்தின் கீழ் எழுதுவதாவது:—

யாவராயினுந் தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதி கடவாது நின்று, வழிபடின் முத்திபெறுவார்.

அவ்விதி கடந்தோர் பயன் பெருர்....... பல சிவஸ்தலங்களுக்கும் போய் வணங்கித் திருப்பணி செய்தலே தொழிலாகக் கொண்ட இந்நாயனுருக்குச் சிதம்பர தரிசனத்திலே வேட்கை மிக்குற்றது இவ் வேட்கையின் மிகுதி, அது விளைந்த அன்றிரவு இவருக்கு நித்திரையின்மையானும், மற்றநாள் இவர் தாம் தில்லைக்குச் செல்லில் கோயிலினுள்ளே புகுதல் தமது சாதிக்கு இயையாது, என்பதை நினைந்து போகாதொழிந்தாராயினும் .. பின் தில்லையின் எல்லையை அடைந்தமையானுந் தெளியப்படும்.

திருத்தொண்டர் புராணத்திலே,

"அங்குந்தங்குலநினைந்தேயஞ்சியணைந்திலர் நின்ருர்"
"இன்னறருமிழிபிறவியிதுதடையென்றேதுயிலார்
அந்நிலைமையம்பலத்துளாடுவாரிருந்தருளி"
"மாசுடம்புவிடத்தீயின்மஞ்சனஞ்செய்தருளியெழுந்
தாசின்மறைமுனியாகியம்பலவர்தாளடைந்தார்"

எனவரும் செய்யுட்களும் காண்க. இதனுல், வேதாகம விதிக்குப் பயந்து சாதிநெறி கடவாமல் நின்ற இந்நாயனுரது பெருந்தன்மை எல்லாரும் அறிந்து பின்பற்றத்தக்கதாம்.

சிவபெருமானுடைய திருவடிகளில் இடையருத பத்தியுள்ளவரும் சிவபெருமானைக் குறித்து இசைபாடுபவரும் ஆகிய திருநீலகண்டப் பாணுரைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் சீகாழியில் திருக்கோயிலின் வாயில் முன்நிறுத்தி இசைபாடச் செய்தனரன்றி அப்பெரியார் கோயிலினுள்ளே சென்று இசைபாடச் செய்திலர்.

"கோயிலினிற்புறமுன்றிற்கொடுபுக்குக்கும்பிடுவித்
தேயுமிசையாழுங்களிறைவனுக்கிங்கியற்றுமென
வாயபுகழ்ப்பிள்ளையாரருள்பெற்றவதற்கிறைஞ்சி
மேயதொடைத்தந்திரியாழ்வீக்கிமிசைவிரிக்கின்ருர"

என்னும் சேக்கிழார்நாயனுர் திருவாக்கால் உணர்க.

திருநாளைப்போவார் முதலிய பெரியார்களுடன் இக் காலம் தேகாபிமானங்கொண்டு தீச்செயல் புரியும் கீழ் மக்களைச் சமப்படுத்திப் பேசத்துணிந்த தீச்செயல், விதியின் செய்கையன்றி வேறென் சொல்வது. திருநா ளைப்போவாரை அக்கினியில் மூழ்குவித்து. அழைத்து வரும்படி கூறியது முதலிய அருட்செயல்கள் சிறப் பிலக்கணங்களாம். அத்தகைய அருட்செயல்கள் வெளி யான பின்னும் அவ்வக்காலத்துக் குறிப்பிட்ட அவ் வொருவரேயன்றி, அவர்கள் பந்துக்கள் ஒருவராவது நுழைந்தாரென்பதற்குப் பிரமாணம் இல்லை. ஆகவே தத்தமக்கு விதித்த எல்லை கடந்து கருப்பக்கிருகம் முத லிய இடங்களிற் போக ஆசைப்படுவதும் போக முயல் வதும் பெரும் பாவம்.

"எவரேனுந்தாமாகவிலாடத்திட்ட
திருநீறுஞ்சாதனமுங்கண்டாலுள்கி
உவராதே அவரவரைக்கண்டபோது
வுகந்தடிமைத்திறநினைந்தங்குவந்துநோக்கி" என்று

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்திலும் பிறவிடங்களி லும் கூறப்பட்டிருக்கின்றனவே யெனின்: இது தீண் டாதாரைக் கோயிலினுள் விடும்படி சொல்லப்பட்டன வன்று. எவராயினும் விபூதி உருத்திராக்கங்களை அணிந்து, சிவபெருமானுடைய ஸ்ரீபாதங்களில் மெய் யன்பு செலுத்துவாராயின் பத்திநெறி கடைப்பிடித்து அவரைச் சிவமாகப் பாவித்து வழிபடக்கடவர். திருநீல நக்கநாயனர் தம்முடைய இல்லத்தின்கண்ணே ஓமகுண் டத்தருகில் திருநீலகண்டப் பெரும்பாணர் தங்குதற்கு இடங் கொடுத்தது முதலியன இப்பத்திநெறி பற்றியே யாம்.

தற்காலத்திலே பரம்பரையாக அனுசரிக்கப்பட்டு வரும் சாதிபேதம் பற்றிப் பலரும் பலவாருகப் பேசிக் கொள்கிருர்கள், தேவாரம் திருமந்திரம் முதலியவை கள் சாதி நெறி பற்றிச் சொல்லவில்லை ஆதலால் சாதி பேதம் பார்த்தல் கூடாதென்பர் சிலர். வேதாகமங்க ளிலே சாதியென்பது ஒன்றில்லை என்கிருர் வேறு

சிலர், ஆகமங்களிலே பலவகைப்பட்ட சாதிகள் கூறியிருப்பினும். அவற்றைத் தமிழராகிய நாம் கொள்ள வேண்டியதில்லையென்று கூறுவர் இன்னுமொரு சிலர், பழந்தமிழருட் சாதி பேதமில்லை. ஆதலால் சாதியை வேரோடு களைந்தெறிய வேண்டுமென்று முழக்கம் செய்வர் மற்றொருவர், இன்னோரன்ன விதமாகச் சாதியில்லையென்று சாதிக்கத் தொடங்கி, தம்முள் மாறுபட்டுக் கூறியமையே அவர்கள் கொள்கை பிழையுடையதென்பதைக் காட்டும், சாதியேத முண்மையைப் பாரம்பரியம் நிலை நிறுத்துவது போலவே நம் சமயப் பிரமாண நூல்களும் வலியுறுத்துகின்றன, சைவசமயி என்று தம்மைக் கொள்வோர் யாவராயினும் கன்ம நெறியை உடன்படவேண்டும். உடன்படவே சாதியையும் ஒப்புக்கொண்டவர் ஆவர். எதனால் எனில் கன்மமானது உயர்ந்த சாதி. இழிந்த சாதியென்றும், பூரண ஆயுள் குறைந்த ஆயுள் என்றும், பெருகிய போகம் சுருங்கிய போகம் என்றும் மூன்று விதமாம் எனவும் முற்பிறவிகளிற் செய்யப்பட்ட புண்ணிய பாவத்திற் கீடாகவே ஆன்மாக்கள் பிறவியைப் பொருந்துகின்றன எனவும் ஞானசாத்திரங்கள் செப்புகின்றன, உயர்ந்த வருணத்திற் பிறப்பதும், இழிந்த வருணத்திற் பிறப்பதும் முற்பிறப்பிற் செய்து கொண்ட கன்மத்தினாலாவதன்றிப் பூமியிற் பிறந்தபின் செய்து கொள்ளக் கூடியதன்று, என்பது உணரப்படும். சித்தாந்த சாராவளியிலும் அதன் வியாக்கியானத்திலும், ஆன்மாக்களுக்குச் சரீரம் இந்திரியம் முதலிய விஷயங்கள் பலவிதமாகும் என்றும், கன்மமானது ஆன்மாக்கள் தோறும் ஜாதி ஆயுள் போகங்களைத் தனித்தனியே ஏற்பாடு செய்து கொண்டு இருப்பது என்றும் கூறப்பட்டது இருக்குவேதம், பத்தாவது மண்டலத்தில், விராட்புருஷனது முகத்தில் பிராமணர்கள் இருப்பார்கள், புயங்களில் அரசர்கள் இருப்பார்கள், தொடைகளில் வைசியர்கள் இருப்பார்கள், பாதங்களில் சூத்திரர்கள் இருப்பார்கள் என்று கூறப்பட்டது.

எவர்கள் இங்கு கெட்ட நடத்தையுடையவர்களோ அவர்கள் அடுத்த பிறப்பில் இழிந்த பிறப்பாகிய நாயாகவோ, பன்றியாகவோ, சண்டாளராகவோ பிறப்பார்களென்று சாந்தோக்கியஉபநிடதத்தில் கூறப்பட்டது காண்க. யசுர்வேத மத்தியிலுள்ள ஸ்ரீ உருத்திரத்தில், நிஷாதர் உருவாகிய உங்களுக்கும் நமஸ்காரம் என்று சொல்லப்பட்டது. (நிஷாதர்—சண்டாளர்) பகவத்கீதையில், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணங்களும், என்னாலே குணங்கள், கன்மங்கள் ஆகிய பலவித பாகத்தினால் உண்டுபண்ணப்பட்டன என்றும், எவர்கள் நீச சன்மத்தையுடையவர்களோ, அவர்கள் தாமும் என்னை விசேஷமாகச் சேவித்து உத்தமமான பதவியை நிச்சயமாக அடைகின்றார்கள் என்று சொல்லப்பட்டது.

சுப்பிரபேத ஆகமத்தில், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், என்னும் நான்கு வருணமும் சுத்த குலமென்றே சொல்லப்பட்டது.
இவர்களுக்கு ஆசௌசநாட்களும் காமிகம் முதலிய ஆகமங்களிலும் ஸ்மிருதி, புராணங்களிலும் விதிக்கப்பட்டன. பிராமணர் பத்து நாட்களில் சுத்தியாகின்றார், க்ஷத்திரியர் பன்னிரண்டு நாளிலும், வைசியர் பதினைந்து நாளிலும் சுத்தியாகின்றனர். சூத்திரர் முப்பது தினங்களில் சுத்தியாகின்றனர் ஷெ என்றும் விதிக்கப்பட்டது. அநுலோமருக்கும் ஆசௌச தினங்கள் நியமிக்கப்பட்டுள்ளன. சாதிகளை ஒன்றுபடுத்தில் மரண சனன சௌசங்கள் உண்டா? இல்லையா? பூர்வக் கிரியைகள். அபரக்கிரியைகள் உண்டா? இல்லையா? அவைகளுக்கும் சட்டம் வகுப்பார்கள் போலும். ஔவையார் அருளிச்செய்த நல்வழி இரண்டாம் செய்யுளாகிய

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி.

என்னும் வெண்பாவையும் தமக்குச் சாதகமாகுமென் றெண்ணிச் சாதியில்லை யென்பதற்குப் பிரமாணமா கப் படிக்கின்றனர் சிலர். அதனையும் ஆராய்வாம். இதற்கு நாவலரவர்கள் செய்த உரை,

சாற்றுங்கால் மேதினியில் சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை - சொல்லுமிடத்துப் பூமியிலே (உயர்வாகிய சாதியென்றும் இழிவாகிய சாதியென்றும்) சாதியி ரண்டேயல்லாமல் வேறில்லை. (அவ்விரண்டு சாதியா ரும் யாவரெனில்) நீதிவழுவா நெறிமுறையில் இட் டார் பெரியோர்-நீதிதவறாத நல்வழியிலே நின்று கொண்டு முறைமையோடு (சற்பாத்திரங்களா யுள்ள வர்களுக்கு) கொடுத்தவரே உயர்வாகிய சாதியார் இடாதார் இழிகுலத்தோர் கொடாதவரே இழிவாகிய சாதியார், பட்டாங்கிலுள்ளபடி—உண்மை நூலிலுள்ள கிரமம் இதுவேயாம். என்பதாம்.

சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திரத்து, 24, செய் யுள் "இந்தப் பார்மே-லிட்டிய நற்குலத்தினில் வந்தவத ரித்து" எனவும், இரண்டாம் சூத்திரம் 90 ம் செய்யுள். "தரையினிற் கீழைவிட்டுத் தவஞ்செய் சாதியில் வந்து" எனவும் கூறியபடி சாதியிரண்டென்பது பெறப்பட்ட வாறு காண்க. இடுதலும் இடாமையும முற் பிறப்பிலா, அல்லது இந்தப் பிறப்பிலா எனில், முற்பிற விபிலே தாம் தாம் செய்த நல்வினை தீவினைகளைப் பிரமா விதித்தபடி தாமே அனுபவிப்பா என, நல்வழி 30 ம் செய்யுளும், புண்ணியமே செய்யத் தக்கது, பாவமே ஒழி யத்தக்கது முற்பிறப்பில் செய்த அப்புண்ணிய பாவங் களே பூமியிலே பிறந்த மனிதர்களுக்கு இப்பிறப்பிலே இன்ப துன்பங்களை அனுபவித்தற்குக் காரணமாக வைத்த பொருளாகும், என முதல் வெண்பாவும், பூமி யிலே சற்பாத்திரத்திற் செய்யப்படும் தானத்தினலே பா வம் நீங்கும் என்று உணர்ந்து முற்பிறப்பிலே சற்பாத் திரத்திலே தானஞ் செய்யாதவருக்கு முற்செய்த அப்பா வம் வறுமைக்கு வித்தாயிருக்க இப்பொழுது கடவுளை

குமாரசுவாமிப் புலவர் நூலகம்
புலவகரம்,
மயிலணி :: சுன்னுகம்,
இலங்கை.

வெறுத்தால்பெரிய திரவியம் பொருந்த வருமோ வராது, என 17 ம் செய்யுளும் கூறியாங்கு பூர்வசென்ம கன்மத்திற்கீடாகவே சாதி ஆயுள் போகம் வரும் என்னும் உண்மையை உணர்ந்து கொள்க.

''தாந்தாமுன் செய்தவினை தாமே யநுபவிப்பார்
பூந்தாமரையோன் பொறிவழியே'' எனவும்
''புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்'' எனவும்

செய்தீவினை யிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்
தறும்பாவமென்ன வறிந்தன் றிடார்க்கு. எனவும் வரும்

நல்வழிப் பாக்களினல் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினை காரணமாகவே இப்பிறவியில் சாதி ஆயுள் போகம் வருவன என்பதை அறிக.

''ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்'' என்று வேதாகமங்களை நன்குணர்ந்த திருமூலரே கூறியிருக்கிறார். இதனை ஏற்றுக்கொள்ளும் சைவர்கள் நல்லகுலம் தீயகுலத்தை நிலைநாட்டக் கனவிலும் நினைப்பார்களா. என்று பிரசங்க மேடைகளில் நின்று சில பட்டதாரிகள் போதிக்கின்றார்கள். முற்றத்துறந்த திருமூலமாமுனிவரே தமது திருமந்திரத் திருமுறையில்,

1. ''மறையவரர்ச்சனை வண்படி கந்தான்
இறையவரர்ச்சனை யேய பொன்னகும்
குறைவிலா வயிசியர்க்குக் கோமளமாந்
துறையுடை சூத்திரர் தொல்வாணலிங்கமே''

எனவும்,

2. ''அந்தணராவோ ரறுதொழில் பூண்டுளோர்''

எனவும்,

3. ''பேர்கொண்ட பார்ப்பான்'' எனவும்,

4. ''மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையி னொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே'' எனவும்,

5. "குயவன் திருக்கையி லேற்றிய மண்ணைக்
குயவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்" எனவும்

உயர்ந்த நான்கு வருணங்களையும், புலையர், குயவர் என்ற சாதிகளையும் கூறியிருத்தலை அவர்கள் ஏனோ பார்த்திலர்.

"ஒன்றே குலனும்" என்பதற்குச் சாதியில்லையென்று பொருள் கொண்டால், அத்திருமந்திரத்தின்கண் நாற்பாற் குலங்களையும் எடுத்தியம்பிய பகுதிகளின் கதியாதாய் முடியும். ஒரு நூலுக்குப் பொருள் காணுங்கால் முன்பின் விரோதமுறாவண்ணம் பொருள் கொள்வதன்றோ பொருத்தம். ஆகையினாலே அத் திருமந்திரத்துக்கு மெய்ப்பொருள் யாதெனிற் காட்டுதும். "ஒருவனே தேவனும்" என்பது சர்வசங்கார காரணரும் அழிவில்லாதவருமாகிய பரம்பொருள் சிவபெருமான் ஒருவரே என்பதையும், "ஒன்றே குலனும்" என்பது அப்பரம்பொருளாகிய சிவபெருமானுக்குச் சீவர்களெல்லாம் மீளா அடிமைக்குடி என்பதையும் குறிக்கும் என்று கொள்ளுவதே சற்சம்பிரதாயத்தில் வந்த மெய்ப்பொருளாம். ஆகவே "ஒன்றே குலனும்" என்ற திருமந்திரப் பகுதிக்குக் குலபேதமில்லை என்று பொருள் கொள்வது பொருத்தமற்றதென்று துணியப்பட்டது.

தேவாரம் திருமந்திரம் முதலியவைகளில் சாதிநெறி பற்றிச் சொல்லப்படவில்லை, ஆதலால் சாதிபேதம் பார்த்தல் கூடாதென்பர், தெய்வச் சட்டமறுப் பியக்கக் கட்சியார். இக்கட்சியார் தீண்டாதார் ஆலயத்தினுள் புகலாம் என்பதற்குப் பிரமாணமாக, "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்" என்ற தேவாரத்தை எடுத்துக் காட்டினர் ஆகவே புலையர் என்பதோர் சாதி தேவாரத்திலும் உள்ளதென்பதைக் காண்பித்துச் சாதியை ஒப்புக் கொண்டமை வியக்கத்தக்கது. அவ்வொரு தேவாரமேயன்றி இன்னும் பல தேவாரங்களில் சாதிகளைப் பற்றிச் சொன்ன பகுதிகள் உள. அவற்றுள் சிலவற்றை மாத்திரம் ஈண்டுக் காட்டுதும்; காண்க.

1. சாதியால் மிக்க சீரால் தகுவார் தொழுஞ் சாத்த மங்கை

2. அங்கமோ ராறவையு மருமாமறை வேள்விகளும்
எங்குமிருந்தந்தணர் எரிமூன்றவை யோம்புமிடம்
.................. நனிபள்ளியதே எனவும்,

3. தென்னர் சேரர் சோழர்கள் தாம்வணங்கும்
.................. திருப்பூவணமே, எனவும்

4 வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளராக் கூரிற்ருன் ரேன்றிமாடமே. எனவும்,

5 களத்தமேதி காணுதாயன் கைமேற் குழலூத
அனைத்துஞ் சென்று திரளுஞ்சாரல் அண்ணுமலை, எனவும்.

6. கடல்வாழ் பரதர்மனைக்கே நுளைமூக்கின் சங்கமேறி
முத்தமீனும் சண்பை, எனவும்,

7. வெஞ்சொற் பேசும் வேடர் மடவார் எனத் தேவாரத் திரு
முறையிலும்

'சாதியும் வேடுவன்'' ''விருப்புற்று வேடனுர்'' எனத் திருவாசகத்திலும் அந்தணர் முதலிய வருணங்கள் சொல்லப்பட்டிருத்தல் அறிக,

அந்தணர்க்கு இங்கே வேதமோதுதல் முதலியவற்றை உரியனவாகக் கொண்டு கூறியதும், வேளாளர்களை ஈதலிற் பெருங்கீர்த்தி யுடையவரென்று கூறியதும் பிறவும் நோக்குக. உமாபதி சிவாசாரியரால் துதிக்கப்பெற்றவரும், முதன் மந்திரியாயிருந்து லௌகிகத்தன்மையிலும் முற்றும் தேர்ந்தவரும், தொண்டைநாட்டு வேளாள திலகருமாகிய சேக்கிழார் சுவாமிகளால் செய்யப்பட்ட பெரிய புராணம் சைவசமயிகளுக்குக் கண்போன்றது. இப்பெரியபுராணத்திலே பிராமணர் முதல் புலையர் ஈருகிய சாதிகள் சொல்லப்பட்டுள்ளன. சாதி பேதம் கூறிய செய்யுள்களையும் அப்பெரிய புராணத்தில் கண்ணுறலாமே. மேலும் வேதாகம சாத்திரங்களிலும் இதிகாச புராணங்களிலும் தேவாரத் திரு

முறைகளிலும் ஞானசாத்திரங்களிலும் வருணநெறி பற்றிய பகுதிகளைப் பார்க்கலாமே. அன்றியும் வருணாச்சிரமபேதம் பற்றியுள்ள விதிகளை நாவலர் எழுதிய பாலபாடம் சைவவினாவிடை முதலியவற்றிலும் காணலாமே. மெய்ப்புலவர்களால் உச்சிமேற் கொள்ளப்படும் கந்தபுராணத்திலே,

,'தலத்திடை வேறிடத் தொதுங்குந் தண்ணிய
குலத்திடைப் பிறந்தவர் கூட்டமாமென''

(தண்ணியகுலம்–இழிந்தகுலம்) என வருவதையும் நோக்கலாமே! இன்னும் சங்க நூல்களிலும் சாதி நெறி பற்றிய பாக்களைக் கண்டு கொள்ளலாமே. இப்படி எல்லாம் இருப்பவும் முழுப்பூசினிக்காயை வட்டிற் சோற்றின் மறைத்து உலகை ஏமாற்ற முடியுமா.

தொல்காப்பியனார் அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் என்னும் நாற்பாற் குலத்தினருடைய மரபு முறையைத் தம்மரபியலில் கூறப்புகுந்து முதற் கண்,

''நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய'' என

அந்தண குலத்துக்குரிய மரபுமுறை கூறுவர். நூல் என்பதற்கு முந்நூல் எனப் பேராசிரியர் உரை கண்டார்.

அரசர்க்குரிய மரபு முறை

படையுங் கொடியுங் குடையு முரசு
நடைபயில் புரவியுங் களிறுந் தேரும்
தாருமுடியும் நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய.

வணிகர்க்குரிய மரபு

வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

வேளாளர்க் குரியன

வேளாண் மாந்தர்க் குழுதூணல்ல
தில்லெனமொழிப பிறவகை நிகழ்ச்சி.

என வருவனவும் பிறவும் கண்டுகொள்க.

பன்னிருபாட்டியல் ஆசிரியரும்,

பார்ப்பா ரரசர் வணிகர் வேளாளரென்னப்
பாற்படு நாற்பெயர் குலப்பேராகும்.

என்பதனுல் குலம் நான்கெனக் கூறினர்.

மேலும், புறநானூற்றில்

1. ஒன்று புரிந்தடங்கிய விருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்டகவிருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்.

2. ஏற்ற பார்ப்பார்க் கீரங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து.

3. நன்பல கேள்வி முற்றிய வேள்வி
யந்தணர்க் கருங்கல நீரொடு சிதறி. எனவும்

பட்டினப்பாலையில்

4. நான் மறையோர் புகழ் பரப்பியும். எனவும்

சிறுபாணற்றுப்படையில்

5. பொருநற் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும். எனவும்

பெரும்பாணற்றுப்படையில்

6. கேள்வியந்தண ரருங்கட நிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ.

7. மனையுறை கோழியொடு ஞமலி துன்னது.
(மனைகளிலே தங்கும் கோழிகளுடனே நாயும் சேரா
மல்)

வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்.
(வளைந்த வாயினையுடைய கிளிக்கு வேதத்தின் ஓசையைக் கற்பிக்கும் எனவும்,

பரிபாடலில்

8. அறத்தொடு வேதம் புணர்தவ முற்றி
விறற்புகழ் நிற்ப விளங்கிய கேள்வித்
திறத்திற் றிரிவில்லா வந்தண ரீண்டி
யறத்திற் றிரியாப்பதி.

எனவும் வருவனவும் பிறவும் கண்டுகொள்க.

இங்கே அந்தணர் இருபிறப்யாளர் என்பதும் அவருக்கு வேதமுரியதென்பதும் அவருக்கு ஏற்றல் உரியதென்பதும் அவருடைய இல்லங்களிலே நாய் கோழி தங்குவதில்லை என்பதும் பிறவும் கூறப்பட்டுள்ளன. இனி,

குறிஞ்சிப்பாட்டில்

மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்ததே எத்துப் பண்ணியம் பகர்நரும். எனவும்

திரிகடுகத்தில்

கழகத்தால் வந்த பொருள் காமுறுமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போ லொழுக
லுழவின்கட் காமுற்று வாழ்த லிம்மூன்று
மழகென்ப வேளாண் குடிக்கு.

எனவும் வருவன முறையே வணிகரையும் வேளாளரையும் குறிப்பனவா மென்றுணர்க.

தச்சர் முதலியோர்

1. தச்சச் சிறுஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்,
எனப் பெரும் பாணாற்றுப் படையினும்

குமாரசுவாமிப் புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

2, வைகல்—எண்டேர் செய்யும் தச்சன்.

3. வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
எனப் புறநானூற்றிலும்,

4. கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர் என மது
ரைக் காஞ்சியிலும்,

புலையர் முதலியோர்

5. துடியன் பாணன் பறையன் கடம்பனென்றிந்
நான் கல்லது குடியுமில்லை

6. துடியெறியும் புலைய

7, இழிபிறப்பாளன் சருங்கை சிவப்ப
வலிதுரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி
எனப் புறநானூற்றிலும்

8. கொழுங்குடிச் செல்வரும் பிறருமே எய
மணம்புணர்க் தோங்கிய வணங்குடை நல்லில்

(குடிச் செல்வரென்றார் நான்கு வருணத்தை, பிற
ரென்றார் அவர்களாற் றோன்றிய ஏனைச்சாதிகளை)

என மதுரைக் காஞ்சியிலும் வரும் பகுதிகளும் இவ்
வாறே சிலப்பதிகாரம் முதலிய நூல்களுள், வரும்பகுதி
களும் பலவகைச் சாதிகள் உண்டெனக் காட்டுகின்
றன.

இதுவரையும் காட்டிய தொல்காப்பியம் புறநா
னூறு பரிபாடல் முதலிய பழந்தமிழ் நூற்பிரமாணங்
களாலே சாதி வேற்றுமை உண்டென்று நன்கு நிறு
வப்பட்டமை காண்க.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், சிவப்பிராம
ணர் கர்ப்பக் கிருகத்திலும், பிராமணர்கள் அர்த்த
மண்டபத்திலும், க்ஷத்திரியர் மகாமண்டபத்திலும்,
புகுந்து சிவமூலமந்திரத்தினாலே புஷ்பாஞ்சலி செய்
யக்கடவர். வைசியர் இடபத்துக்கு முன்னும், சூத்தி
ரர் இடபத்துக்குப் பின்னும் கோமயத்தினாலே சதுரச்

சிரமாக இடம்பண்ணிச் சிவமூல மந்திரத்தினாலே அருச் சிக்கக் கடவர். என்று சிவாலய தரிசன விதியிலும்,

உயர்ந்த நான்கு வருணத்தார்க்கும் ஆகமத்திலே விதிக்கப்பட்ட தீக்ஷைக்கு அருகரல்லாத மற்றைச் சாதியர்கள் ஆசாரியரை அடைந்து தங்கள் தங்கள் அதிகாரத்திற்கேற்பத் திருநோக்கம் முதலிய தீக்ஷையைப்பெற்று தேவாலயத்தை வலஞ்செய்து வணங்குதலும் செய்வார்களாயின் பரகதிபெற்றுய்வர்களென்று நான்காம் பாலபாடம் வருணமென்ற பாடத்திலும், "திருக்கோயிலினுள்ளே போதற்கு யோக்கியரல்லாத சாதியார்கள் திருக்கோயிலிற் புறத்திலே பிரதக்ஷிணம் பண்ணித் திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக் கடவுளைத் தோத்திரம் செய்யக்கடவர்" என்று தேவாலய தரிசனம் என்னும் பாடத்திலும், சைவசமயநெறி உரை முதலியவற்றிலும் கூறியவாற்றாலும், உணர்ந்து கொள்க.

திருநந்தன வனத்தினுள்ளே புறச்சமயிகள் தூரஸ்திரீகள் முதலாயினோர் உள்ளே புகாமல்பாதுகாத்தலும், திருக்கோயிலினுள்ளே புகத்தகாத இழிந்த சாதியாரும், புறச்சமயிகளும் முதலாயினோர் உட்புகாவண்ணம் தடுத்தல் சிவாலயப் பணிகள், என்று நாவலர் அவர்கள் கூறியுள்ளமை கண்டுகொள்ளத்தக்கதாம்.

உத்தரகாமிகம் சிவார்ச்சனா விதிப்படலத்தில்,

ஶிவத்³விஜக³ணாநாம் து க³ர்ப⁴கே³ஹாந்த ஸேவித:।
ஶிவதீ³க்ஷிதவிப்ராணாம் ஸந்நிதா⁴நேவ ஸேவித:।
ஶ்ராத்³த⁴ப்ராவகவிப்ராணாம் ஸ்நபநமண்ட³பஸேவித:।
யஜ்வத்வவர்ஜிததீ³நாம் அர்த⁴மண்ட³பஸேவித:।
ந்ருபதிவைஶ்யயோஶ்சைவ மஹாமண்ட³பஸேவித:।
தீ³க்ஷாவிஶேஷகஶூத்³ராணாம் ப³ஹிர்மண்ட³பஸேவித:।
தீ³க்ஷாஸமயஶூத்³ராணாம் ந்ருத்தமண்ட³பஸேவித:।
அந்த்யஜாதிதீ³க்ஷாணாம் கோ³புரத்³வாரஸேவித:।

ஆதிசைவராகிய குருமார் கருப்பக்கிருகத்திலும், சிவ தீக்ஷைபெற்ற பிராமணர் அந்தராள மண்டபத்திலும், வேதாத்தியயனஞ்செய்யும் பிராமணர் அர்த்தமண்டபத்திலும் நின்று வணங்கவேண்டும். யாகஞ் செய்பவனும் தபஸ்வியும் முனிவனும் முகமண்டபத்திலும் நின்று சேவித்தல் வேண்டும். தீக்ஷைபெற்ற க்ஷத்திரியவைசியர் மகாமண்டபத்தில் நின்று சேவித்தல் வேண்டும். தீக்ஷை பெற்ற நைட்டிக சூத்திரர் பெகிர் மண்டபத்திலும், சமய தீக்ஷை பெற்ற சூத்திரர் நிருத்த மண்டபத்திலும் ஏனையோர் கோபுர வாயிலிலும் நின்று சேவிக்கல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிவாலய நித்தியபூசா விதி தேவகோட்டை சிவாகமசங்க வெளியீட்டிலும் காண்க.

சுப்பிரபேதாகமம் பிராயச்சித்த விதி படலத்திலே,

𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑌾𑌦𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌨𑌾𑌨𑌦𑍍𑌵𑌯𑌂।
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍇𑌨 [illegible] 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇।
𑌭𑌸𑍍𑌮𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌤𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍।

அந்தராளர் முதலியவர்கள் தீண்டினல் இருமுறை ஸ்நானஞ் செய்க. பிரமாதத்தாற் பரிசித்தால் ஸ்நானம் பண்ணிப் பின்பு பஸ்மதாரணஞ் செய்து, பஞ்சாக்ஷரத்தில் தூறுருச் செபிக்க எனவும்;

ஜாதிபேத விதி படலத்திலே,

𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵 [illegible] 𑌯𑍋𑌜𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃
[𑌤𑌾𑌃

விராத்தியர் முதலிய தாழ்ந்த சாதியார்கள் எல்லாக் கருமங்களுக்கும் புறம்பானவர்கள் எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

உத்தரகாரணாகமம் பாதுகாராதன விதி படலத்திலே,

[illegible]।
[illegible]। [illegible]
[illegible]

பசுக்கொலை செய்பவர் சண்டாளர் சோனகர் முத லிய புறச்சமயிகள் சிவாலயத்தைத் தாண்டி உட்பிர வேசித்தல் கூடாது.

மயக்கத்தினுல் பிரவேசிப்பார்களாயின் சம்புரோக்ஷ ணம் செய்க எனவும்,

ஶ்வபசம்லேச்ச ஸம்ப்ராப்தே சண்டாலைஶ்சாந்த்யஜாதிபி:|
ப்ரதமாவரணே சைவ மண்டபாவ்ருதே| [ஶ்ரீ|
பாண்டாந் ஸந்த்யஜ்ய ஸர்வஶ: ப்ரோக்ஷணம் ஸமாசரே
த்விதீயாவரணே ப்ராப்தே ஶாந்திகும்பேந ப்ரோக்ஷயேத்
த்ருதீயாவரணே ப்ராப்தே பஞ்சகவ்யேந ப்ரோக்ஷணம்
[ஸவெஶ|

சண்டாளர், மிலேச்சஜாதி முதலியோர் கருப்பக்கிரு கத்திற் போனுலும், முதலாம் ஆவரணத்திற் போனுலும், மடைப்பள்ளியிற் போனுலும், பாண்டங்களை நீக்கி சம்பு ரோட்சணம் செய்க. முதலாம் ஆவரணவாசல்வரையில் போனுல் சாந்திஹோமம் செய்க. இரண்டாம் ஆவர ணத்திற் போனுல் சாந்திகும்பத்தாற் புரோட்சிக்க. மூன் ரும் ஆவரணத்திற் போனுல் பஞ்சகவ்வியத்தினுற் புரோட்சிக்க எனவும்,

(இரண்டு வீதியுள்ள ஆலயங்களில் முதலாம் வீதியில் மற்றைய மூன்று வீதிகளும் அடங்கும்)

ப்ரதமாவரணே ப்ராப்தே ஶூத்ராத் விஶோதித:|
உக்தவாக்ய: ப்ரவிஶ்யாத ஸம்ப்ரோக்ஷணம் ஸமாசரேத்|
ப்ராகாராப்யந்தரே வாபி ஶாந்திஹோமம் ஸமாசரேத்|
மண்டபம் ப்ரவிஶ்யாத பாண்டம் த்யக்த்வா ஶவிஸ்தரம்|
த்விதீயாவரணே சைவ பஞ்சகவ்யேந ப்ரோக்ஷணம் ஸவெஶ|

கள்விற்போர் முதலாரணத்திற் சென்றுலும் மண் டபத்திற் சென்றுலும் சம்புரோட்சணம் செய்க. பாக

சாலேயிற் பிரவேசிப்பின் சாந்திஹோமம் செய்க. இரண்டாம் ஆவரணத்திற் பிரவேசிப்பின் பஞ்சகவ்வியத்தாற் புரோட்சிக்க எனவும்,

ஜாதாஶௌச ஸூதகாவஸ்தாநாத் ஊர்த்வம் நப்ரவிஶேத்|
ஶோகே நப்ரம்ஶேத்யபி சவா ப்ராப்ய விராத்ராந்நாஶநம்|
தஸ்ய தஸ்ய ப்ரயத்நேந ப்ரவிஶேஜ்ஜந்மவாஸரே|
ஸம்ப்ரோக்ஷணம் ப்ரகுர்வீத ப்ரதமாவரணே ஶரணா
ஶாந்திவித்யா ஹோமகார்யேஷு ஸ்வஸ்தம் ஸம்ஹவேத்தயா|
க்ஷயம்வ த்வம் ப்ரகுர்வீத த்விதீயாவரணே யதா|
ப்ராதக்ஷிண்யக்ரமேணைவ ஹ்ருத்வா பிம்பம் ப்ரபஶ்யேத்|
விமாநம் பஶ்யேத்தேவ தீபம் வாதாபி ப்ரபஶ்யேத்|

உயர்ந்த சாதியாருக்கும் ஜனனசௌசம் மரணசௌசம் சம்பவிக்குமாயின் ஆலயத்துட் பிரவேசித்தல் தகாது. மயக்கத்தினுல் செல்வானுயின் அற்ப ஆயுளேயும், குலநாசத்தையும் அடைவான். இரண்டாம் ஆவரணத்தைப் பிரதக்ஷிணம் செய்து, பலிபீடத்தைத் தரிசிக்க. விமானத்தையாவது ஆலய தீபத்தையாவது தரிசித்தலுமாம். அவர்கள் பிரவேசித்தால் பிராயச்சித்தம் பண்ணுக எனவும் கூறப்பட்டிருக்கிறது.

பாஞ்சராத்திர ஆகமத்திலும்,

ஸ்நாநஞ்ச சண்டாலஶ்வபக்ஷி ப்ரவிஷ்டாய திக்ஷ்டிரா [ணா
ஸத்வஜேத்ர ந்யாயஸவ்யாஸ்ஹாண்யா நவாஹ்ஸ்த்ர வாஸி
ஹோமக்ஷணீய க்ருதஸ்நா நஸ்தத்வஸ்ய க்ஷவிஶும் ஜபேத்|
ஶதாநிசாஶ்வஸ்ரோதஸ்தத் வஸவ்யம் வஶ்யஸாக்ஷி|

சண்டாளன் முதலானவர்கள் கோயிலினுள்ளே பிரவேசித்தால் சம்புரோட்சணை செய்து, பிராயச்சித்த ஜபம் செய்க என வருவது காண்க.

இப்படியே காமிகம் முதலிய ஆகமங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. சுப்பிரமணியக்கடவுள் அகத்தியமுனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தராகமத்திலே,

"புன்புலைச்சிமனைபுகுந்தாற்புத்தியிழப்பாகிற்போக்கிடுக
மட்பாண்டமுற்புனிதம்புரிக"

என்றற்றெடக்கத்தனவாக உயர்ந்த சாதியினர் வீட்டி னுள்ளே புலையர் முதலோர் புகுந்திடின் பிராயச்சித்தங் கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாயின். அதிபரி சுத்தமாகிய ஆலயத்தில் அவர்களைப் பிரவேசிக்க விடு வது மிகப்பெருங் குற்றமாகவன்றே முடியும்.

ஒவ்வொருவரும் தத்தம் சாதிக்குக் கூறிய ஆசா ரங்களில் வழுவாது நடந்து ஆலய வழிபாடு செய்வாரா யின் முத்தியடைவர்; அங்ஙனமாக நடவாதவர் பிசாச ராவர் என்பது ஆகம சம்மதம்.

சுவாயம்புவ ஆகமம்.

ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே
ஆஜ்ஞாச்சேதீ மமத்ரோஹீ ந ச ஶைவோ மதப்ரிய: ந வி|
ஸ யாதி நரகே கோரே வஸேச்ச ஶ்வபசை: ஸஹ|

சுருதி ஆகமங்கள் எனது கட்டளை; எவன் அவற்றை உல்லங்கனம் செய்கிறானோ அவன் ஆஞ்ஞையை மீறி யவன்; எனக்குத் துரோகி; சைவன் அல்லன்; கோர மான நரகத்திற் கிடந்து வருந்துவான் எனவும்,

பகவத்கீதை.

ய꞉ ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத꞉|
ந ஸ ஸித்திமவாப்னோதி ந ஸுகம் ந பராம் கதிம்|
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி|

சாஸ்திர விதியைக் கடந்து விரும்பியபடி செய்ப வன் முத்தியடையான்; அவனுக்குச் சுகமும் மேலான கதியுமில்லை; சாஸ்திரவிதியை அறிந்து கருமஞ்செய்க எனவும் கூறுகின்றமையால் உணரலாகும்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

முதலாம் பதிப்பு: 1950
இரண்டாம் பதிப்பு: 1966

உ
சிவமயம்

# சாதியும் சமயமும்

பெரியபுராண உரை ஆசிரியர்
சிவக்கவிமணி
கோவை ஸ்ரீமத்.
C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள்
எழுதியது.

## சாதிப்பிரிவு

குலம், குடி, மரபு, சாதி என்னும் பிரிவுகள் நமது நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கிவந்தன. அப்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி இருப்பும் தொழிலும் கடமையும் உரிமையும் விதிக்கப்பட்டு ஒழுக்கத்திலும் நிகழ்ந்து வந்தன. அவைகள் காரணமாக வேற்றுமைகளும் பூசல்களும் நிகழ்ந்தனவில்லை. சிறுபான்மை சரிதங்களில் கேட்கப்படும் அத்தகைய பூசல்களில் வேறு காரணங்கள்பற்றி எழுந்தனவென்பது ஆராய்வோர்க்குப் புலனாகும். சாதிகள் ஒன்றோடொன்று நண்புடன் பிணைந்த சமூகவாழ்க்கையுடையனவாய் நிகழ்ந்துவந்தன. இது நமது முன்னைநாள் கிராம நகர வாழ்வு. ஒரு சாதி மற்றொன்றனை அழிப்பதுவோ தாழ்த்துவதோ இயலாத காரியம். பண்டும் இன்றும் என்றும் இவ்வாறேதான். சாதிகுலங்கட்குரிய தனித்தன்மைகள் வெவ்வேறுதான். வாழை, தென்னை, நெல் முதலிய தாவரங்களில் நூற்றுக்கணக்கானசாதிகள் உள்ளன என்பது தாவர நூலோர் கண்டவுண்மை.

> பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்.

என்ற உண்மை இக்கருத்தை விளக்குவது. இதற்கு இந்நாளில் தவறுகிய பொருள்கொண்டு பூசல்கொண்டு பூசல் விளைக்கக் காரணம் உண்டாக்குகின்றார்கள். மக்கட் கூட்டத்தின் பிரிவினைகள் எப்பெயராலேனும் எக்காரணம்பற்றியேனும் இல்லாத நாடும் தேச

மும் இல்லை. சாதி குலம்பற்றிய பூசல்கள் இந்நாளில் தம்மைத் தாமே மேல் என்று கருதும் ஒரு கொள்ளைக் கூட்டத்தாரால் விளைக்கப்பட்ட விளைவுகளேயாம்.

## கன்மம்

சாதி - ஆயுள் - போகம் என்பன கன்மத்துக்கிடாக இறைவன் தர வருவனவாம் என்பது ஞானசாத்திர உண்மை. இவை படைப்புக்காலம்தொட்டு வந்தனவாயினும்சரி, அல்லது மக்கட் சமூக வளர்ச்சியில் இடைக்காலத்தில் வந்தனவாயினும்சரி பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கிய ஒழுங்குகளை அறவே அழிக்க முயல்வது அறிவுடைமையாகாது. அவற்றுட் புகுந்தனவாகக் காணப்படும் தீமைகளை அகற்றி ஒழுங்குப்படுத்த முயல்வதே முறையாம்.

## சாதி—சமயம்

இனி சாதியும் சமயமும் என்ற நிலைகள்பற்றிப் பார்ப்போமானல் சாதியைவிடச் சமயமே சிறந்தது என்று ஸ்ரீ நாவலரவர்கள் எழுதியுள்ளார்கள் என்று இந்தப் புதுக்கொள்கைக்காரர்கள் தங்கள் விபரீதக் கொள்கைக்கு ஆதரவு தேடுகிறார்கள் ஆங்கிலத்தில் (The Devil quotes scripture for its purpose) என்பதொரு பழமொழி. அஃதாவது பைசாசமும் தனது கொள்கைக்கு நூல் மேற்கோள் காட்டும் என்பது.

நாவலர் மட்டுமா? "சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு மாதமிலி நாயேனை" என்பது போன்ற திருவாக்குக்களும் வேளாளராகிய திருநாவுக்கரசு நாயனாரும் அநதணராகிய அப்பூதி நாயனாரும் ஒருங்கு இருந்து உடனுண்ட பெரியபுராண சரிதவரலாறு முதலியனவற்றையும் தங்கள் நவீன கொள்கைகளுக்கு ஆதரவாக எடுத்துப் பேசுவர். இவை சாதிநிலை பெரிதா? சமயநிலை பெரிதா என்ற கேள்வி வந்தபோது சாதியைவிடச் சமயமே பெரிதென்று சொல்வதேயன்றி, சாதிபேதங்கள் இல்லையென்ருவது, அவை வேண்டாம் என்ருவது, அவற்றைத் தகர்த்தெறிந்துவிட வேண்டும் என்ருவது, கொள்ளுதல் இவற்றின் பொருள் அல்ல. முதல் வகுப்பைவிட ஆருவது வகுப்பு மேல் என்ருல் முதல் வகுப்பு இல்லை என்றும் அல்லது அஃதிருந்தாலும் வேண்டாம் என்றும் சொல்லிவிடலாமா? சாதியைப் பெரிதென்று திமிர்பிடித்துக் கொண்டு சமயத்தைத் தாழ்வாகக் குறை கூறுவாரை நோக்கியே இவை எழுந்தனவாம். "ஞாலமதில் ஞானநிட்டையுடையோர்க்கு நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லைச், சீலமிலைத் தவமில்லை விரதமொடாச்சிரமச் செயலில்லைத் தியானமில்லைச் சித்த

மலமில்லைக், கோலமில்லைப் புலனில்லைக் கரணமில்லைக் குணமில்லைக் குறியில்லைக் குலமில்லைப், பாலருடனுன்மத்தர் பசாசர் குணமருவிப் பாடலினெடாடலிவை பயின்றிடினும் பயில்வர் (சித்தி 284) என்பது ஞான நூல். இதனை எடுத்துவைத்துக்கொண்டு குலமென்பதொன்றில்லை, சீலம் - தவம் - ஆச்சிரமம். என்பவையுமில்லை. யாவர் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். எது வேண்டினும் செய்யலாம் என்று கூவுதல் அறிவுடைமை ஆகாது. மக்கட் படைப்பிலும் ஒவ்வோர் ஆணையும் ஒவ்வோர் பெண்ணையும் வெவ்வேருகப் படைக்கும் கடவுட்படைப்பின் உள்ளுறை அவ்வவர் கன்ம பேதமே காரணமாகும் என்பதை அறிந்து ஒழுகவேண்டாமா?

"கன்மநெறி திரிவிதநற் சாதியாயுட் போகக்
கடனதென வருமூன்று முயிரொன்றிற் கலத்தல்—
தொன்மைய தூழல்ல துணவாசா" — (சிவப்-29)

என்பது ஞானமுடிபுகளுள் ஒன்றுகும்.

## சாதி வேண்டுமா?

சமய ஒழுக்க நிலையின் உறைப்புவரும் வரையில் சாதி நிலைகளும் ஒழுக்கங்களும் காப்பாற்றப்படவேண்டுவதுதான் முன்னையது கைவந்தபோது இவை தூங்கினவன் கைப்பொருள் தானே விழுவதுபோல ஒருவனால் விடப்படுவது என்றில்லாமல், தாமே கழன்று விடும் ஞான உறைப்புநிலை வந்தபோது சமய ஒழுக்கமும் அதன் முன் தாழ்ந்துவிடும் என்பதற்குப் பிரமாணம் முன் காணப்பட்டது.

"சைவமுதலாமளவில் சமயமும் வகுத்துமேற் சமயங் கடந்த மோனசமரசம் வகுத்த நீ" என்பர் ஸ்ரீ தாயுமானுர். எனவே சாதி பேதங்களை விட்டொழித்தல் என்பதும், அவை கடவுள் கற்பனையன்றி. மனிதராற் கற்பிக்கப்பட்டவை என்பதும் பொருளற்ற வெறும் பேச்சுக்களாம்.

சாதி என்பது இப்பிறவியில் வந்த உடலைப்பற்றியது. சமயம் என்பது என்றும் அழியாத உயிரைப் பல பிறவிகளின் தவத்தினுற் றொடர்ந்து வருவது. அதனாலே சாதியை விடச் சமயம் சிறந்தது தான். ஆனால் சமயநிலையில் உள்ள தீக்கை முதலியவை உயிரைத் தூய்மை செய்வனவேயன்றி, அவ்வளவில் உடலைச் சுத்தியாக்க மாட்டா. உடலைப்பற்றிய சாதி முதலிய தொடக்குகள் உடலுடன் தான் ஒழியும். உடலின் நினைவு உள்ளவரையில் அவையிருந்தே தீரும்.

"அங்ஙனமாயின், சைவத்தில் தீக்கைமுதன்மையாகலின்வருணம் ஆச்சிரமம் பற்றித் தாரதம்மியம் கூறுதல் பொருந்தாதெனின்" என்றெடுத்துக்கொண்டு "தீக்கைப்பின் விதிக்கப்படும் ஆசாரங்களெல்லாம் வருணமும் ஆச்சிரமமும்பற்றியே தாரதம்மியம் ஓதுதலானுஞ், சிவதீக்கை ஆன்மாவுக்கேயன்றி வைதிகச் சடங்குபோல உடம்பு முதலியவற்றிற்கு அன்றெனச் சித்தாந்த சாராவலி முதலியவற்றிற் கூறுதலின், அத்தீக்கையால் ஆன்மாவின் கண்ணதாகிய பசுத்துவம் நீங்கியதன்றி உடம்பின் கண்ணதாகிய சாதி நீங்காமையானும், சாதியும் தீக்கையாற் கழியுமாயின் ஆதிசைவம், மகாசைவம், அநுசைவம், அவாந்தர சைவம் என்னும் பகுப்பு ஏலாமையானும், மகா சைவர்க்கு விதித்த ஆசாரம் அவாந்தர சைவராற் செய்தல் கூடாமையானும்............ வருணத்தினும் ஆச்சிரமத்தினும் தாரதம்மியம் உண்மை தெற்றென உணரப்படுமாகலின் அதனை இல்லை என்றலும் வைதிக வழக்கோடும் சிவாகம வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றேயாமென மறுக்க" என்று எமது மாதவச் சிவஞான முனிவரர் பெருமான் மாபாடியம் — சிறப்புப்பாயிரத்துள் ஓதுமாற்றால் உணர்க. எனவே உடல் உள்ளளவும் அல்லது உடலின் நினைவு உள்ளளவும் உடலைப்பற்றிய சாதி ஆச்சிரமம் என்பனவாதி பாகுபாடுகள் ஏதாவதொருவகையில் இருந்தேதீரும் என்பதும், அதனைத் தவிர்க்கலாகாதென்பதும் வெள்ளிடை மலையாய் விளங்கும்.

நந்தனார் "இன்னறரு மிழிபிறவியிது" தில்லையில் இறைவர் பால் அடைவதற்குத் தடை என்ற எண்ணம் (நினைவு) மாறுமல் இருந்தபடியாலே அதனை மாற்றுவதற்குத் தீயில் மஞ்சனம் செய்து மறைமுனிவராகி நம்மிடம் வருக என்று இறைவர் ஆணையிட்டருளினர். கண்ணப்பர் திறத்தில் தமது உடல்குலம் முதலிய நினைவுகள் ஒன்றுமில்லையாதலின், அவர் அவ்வுடலோடே இறைவர்பாற்சென்று பணிசெய்தனர். இவ்வேற்றுமை யுணராதார் பலவாறு பிதற்றியொழிவர். திருநாளைப்போவாநாயனார் புராணத்திறுதியில் எனது உரையினுள்ள குறிப்புக்களையும், அப்பூதியார் புராணத்தில் (1823) விசேட உரைக் குறிப்புக்களையும் பார்க்க. திருநாளைப்போவார்நாயனார் புராண சூசனத்துள் "தத்தம் சாதிநெறி கடவாது சிவனை வழிபடுதல்" என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் "யாவராயினும் தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதி கடவாதுநின்று சிவனை வழிபடின் முத்தி பெறுவர். அவ்விதி கடந்தோர் பயன் பெறுர்" என்பதாதியாகக் கூறுவன காண்க. "மறந்து மயனினைவின்றி வருபிறப்பின் வழிவந்த வறம்புரி கொள்கையாயே யடித்தொண்டி னெறிநின்ருர்" என்ற மாபுராணத் திருவாக்கும் கருதுக.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
சுன்னாகம்,
இலங்கை.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்,
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

சிவமயம்

# வேண்டுகோள்.

சைவ அன்பர்களே !

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் எழுதிய ஆலய சேவை என்னும் இந்நூல் சைவசமயிகள் ஒவ்வொருவரும் சிறப்பாக சைவாலய தர்மகர்த்தாக்களும், மற்றைய ஆஸ்திகர்களும் வைத்திருக்க வேண்டிய இன்றியமையாத ஒரு கைநூலாகும். இது சைவாலயதத்துவம், ஆலய சேவை, ஆலயவழிபாட்டுமுறை, பல்வேறு வருணத்தவரும் ஆலயங்களிலே நின்று சேவிக்க வேண்டிய ஸ்தானங்கள், அவற்றை மீறுவோர் எய்தும் கேடுகள் முதலியவற்றை தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றது.

இன்று சைவாலயத்தின் மேற்படி தத்துவங்களை உணராத சிலரால் எழுதப்பட்ட சந்தேகங்களுக்கெல்லாம் தகுந்த விடையாக ஆகமாதி சைவசாஸ்திர பிரமாணங்களோடு அமைந்துள்ளது இந்நூற் பிரதிகள் கிடைக்கப் பெறுதிருந்தமையின் இன்றைய இதன் அவசியம் நோக்கி இந்நூல் எம்மால் உலகஉபகாரமாக அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கு. பாலசுந்தரக் குருக்கள்
(அ. இ. வே. சை. சி. சபை தலைவர்)
மாவிட்டபுரம்.

சு. துரைச்சாமிக்குருக்கள்
(அ. இ. சை. த. தலைவர்)
மாவிட்டபுரம்.

---

இவ்வெளியீடு: மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் அகில இலங்கை சைவாலய தர்மகர்த்தா சபை, அகில இலங்கை வேதாகம சபையினரதும் சார்பில், ஷ சபையின் தலைவர்கள் பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் அவர்களால் வெளியிடப்பெற்றது. யாழ்-வண்ணை ஸ்ரீ சாரதா அச்சகத்தில் பிரம்மஸ்ரீ கா. மகேஸ்வரக் குருக்கள் அவர்களால் அச்சிடப் பெற்றது. 9-11-66.